# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 141** **நாள் : 26.10.2016**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம்

-----

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா மாளிகையில் இன்று (26.10.2016) மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் தலைமையில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு துறைவாரியாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் கண்காணிப்பு அலுவலர்கள் மூலம் ஒவ்வொரு மண்டலங்களிலும் 21.10.2016 அன்று நடைபெற்ற பொதுமக்களின் கருத்துக் கேட்புக் கூட்டத்தின் போது பெறப்பட்ட ஆலோசனைகளின் பேரில் பணிகள் மேற்கொள்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது தெரிவித்ததாவது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வரவிருக்கும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்காக 2015 பெருமழையினால் நீர்தேக்கம் ஏற்பட்ட 859 இடங்களில், 306 இடங்கள் நீண்ட நேரம் நீர்தேங்கும் இடங்கள் என கண்டறியப்பட்டு, அதில் 115 இடங்களில் தூர்வாரும் பணியும், 52 இடங்களில் விடுபட்ட இணைப்பு கால்வாய்கள் கட்டும் பணியும், 33 இடங்களில் மூலதன நிதியிலும், 24 இடங்களில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டத்தின் மூலமாகவும், 24 இடங்களில் நெடுஞ்சாலைத்துறை மூலமும், 20 இடங்களில் இரயில்வே துறை மூலமும், 14 இடங்களில் பொதுப்பணித்துறை மூலமும் மழைநீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் மூலம் ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் 1894 கி.மீ. நீளமுள்ள 7351 மழைநீர் வடிகால்வாய்களில், 1244 கி.மீ. நீளத்திற்கு 5,311 மழைநீர் வடிகால்வாய்களில் அனைத்து தூர்வாரும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டத்தின் மூலம் 1147 பணிகள் ரூ.1101.43 கோடி மதிப்பீட்டில் 280 கி.மீ. நீளத்திற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அதில் 70.89 கி.மீ. நீளத்தில் 412 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. அதில் 360 பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. மூலதன நிதியின் மூலம் 9 ஆகாயத்தாமரை அகற்றும் பணிகள் ரூ.24.05 கோடி மதிப்பீட்டில் 69.45 கி.மீ. நீளத்திற்கு நடைபெற்று வருகின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, போக்குவரத்து காவல்துறையின் மூலம் மழைக்காலங்களில் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சீரான போக்குவரத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. தடையில்லா போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்படும் 16 சுரங்கப்பாதைகளில் 38 உயர் அழுத்த மின் மோட்டார்கள் மற்றும் சூப்பர்சக்கர் வாகனங்களும், நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பராமரிக்கப்படும் 6 சுரங்கப்பாதைகளில் உயர் அழுத்த மின்மோட்டார்களை தொடர்ச்சியாக இயங்கும் வண்ணம் பரிசோதித்து தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. 13 சுரங்கப்பாதைகளில் மழைநீர் உட்புகுதலை தவிர்க்க IRC தரத்தின்படி, சிறிய தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது, மழைக்காலங்களின் போது இரவு நேரங்களில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள 18 உயர்கோபுர மின்விளக்குகள் தயார்நிலையில் உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மூலதன நிதியிலிருந்து கேப்டன் காட்டன் மற்றும் கொடுங்கையூர் கால்வாயில் ரூ.27.87 கோடி மதிப்பீட்டில் 2.52 கி.மீ. நீளத்திற்கு 5 தடுப்புசுவர் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 42 மீட்புக் குழுக்களும் (Rescue Teams), 103 மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளும், பொதுமக்களை தங்க வைப்பதற்காக 156 நிவாரண முகாம்களும், உணவு தயாரிப்பதற்காக 4 பொது சமையல் கூடங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் சாலைகளில் விழும் மரக்கிளைகளை அப்புறப்படுத்துவதற்காக 2 வாகனத்துடன் 45 மர அறுவை இயந்திரங்கள் தயார் நிலையிலும், மேலும் மழைக்காலங்களில் சாலைகளில் விழும் மரங்களை ஒப்பந்ததாரர்கள் மூலம் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளவும், மழைநீரில் வரும் பாம்புகளை பிடிக்க குழுவிற்கு தலா 3 நபர்கள் வீதம் 9 பாம்பு பிடிக்கும் குழுவினர்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவத்துறையின் சார்பில் மண்டல அலுவலகங்களில் தலா மூன்று மருத்துவ குழுக்கள் பணியாற்றிடவும், தேவையான அளவு மருத்துவ முகாம்கள் நடத்திடவும் மற்றும் அவசர கால மருந்துகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் கொசு மற்றும் தொற்றுநோய்களை கட்டுப்படுத்திட 3,337 மலேரியா தொழிலாளர்கள், 420 அழுத்த தெளிப்பான்கள், 245 கையினால் இயக்கும் புகை அடிக்கும் கருவிகள் மற்றும் 41 வாகன புகையடிக்கும் கருவிகளை தயார்நிலையில் வைத்திடவும் மற்றும் பூச்சி மருந்துகளை இருப்பில் வைத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் மூலம் அடையாறு, கூவம் மற்றும் எண்ணூர் ஆகிய முகத்துவாரங்களில் தூர்வாரி தயார்படுத்தப்பட்டுள்ளது. சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குளோரின் கலந்த குடிநீர் வழங்கிடவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மூலம் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்ளவும், தேவையான அளவு இன்பிளேடபில் படகுகளையும், மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் மழைக்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட இடங்களில் படகுகளை தயார்நிலையில் வைத்திடவும், மின்சார வாரியத்தின் மூலம் மழைக்காலங்களில் மின்தடை ஏற்படுவதை தடுத்திட மின் பகிர்மான பெட்டிகளை பரிசோதித்து தயார்நிலையில் வைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெரிய அளவிலான சாலை வெட்டுக்களை அனுமதியின்றி மேற்கொள்ளக்கூடாது என்றும், மழைநீர்வடிகால்வாயின் மனித நுழைவாயில்களை செப்பனிடவும், திறந்து நிலையில் உள்ள மனித நுழைவாயில்களை உடனடியாக மூடவும், பாலத்தின் அடியில் மண் தேங்காவண்ணம் தொடர்ந்து அப்புறப்படுத்திடவும், ஜே.சி.பி., புல்டோசர், கிரேன் மற்றும் ஜெனரேட்டர் போன்றவற்றையும் அதற்கு தேவையான டீசலையும் தயார்நிலையில் வைத்திடவும், மீட்பு முகாம்களை தூய்மையாக பராமரித்து, முகாமின் அடிப்படை தேவைகளான குடிநீர், கழிப்பறை, மின்வசதி போன்றவற்றை தொடர்ந்து வழங்கிடவும், சமையல் கூடங்களில் சுத்தமான பாத்திரங்களை கொண்டு சமையல் செய்திடவும், சமையலுக்கு எரிவாயு தடையில்லாமல் கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், மாநகராட்சி மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் மழைக்காலங்களில் வந்து செல்ல தேவையான வாகனங்களை ஏற்பாடு செய்திடவும், மழைநீர் தேங்கிய பள்ளங்கள், சுரங்கப்பாதைகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் பிரதான குழாய்களின் கசிவுகளை அவசரமாக சரிசெய்யும் இடங்களில் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் வண்ணம் தற்காலிக தடுப்பு வேலிகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் அமைத்திடவும், அனைத்து தகவல்களையும் அலுவலர்களுக்கு எளிதில் தெரிவிக்கும் வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எனவே, வடகிழக்கு பருவமழை காலங்களில் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வுக்கூட்டத்தில், தமிழக அரசின் வருவாய் நிர்வாக ஆணைய முதன்மைச் செயலாளர் முனைவர்.கே.சத்யகோபால், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., தொழில்துறை முதன்மைச் செயலாளர்/சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் (பொ) திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவலர்/ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.பி.மகேஸ்வரி, இ.ஆ.ப., மண்டல கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களான அரசு செயலாளர் (பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை) டாக்டர்.எஸ்.ஸ்வர்ணா, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் (தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்) திருமதி. ககர்லா உஷா, இ.ஆ.ப., உறுப்பினர் செயலாளர் (CMDA) திரு.சி.விஜயராஜ் குமார், இ.ஆ.ப., மறுவாழ்வுத்துறை இயக்குநர் டாக்டர்.பி.உமாநாத், இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் (TANCEM) திரு.சி.காமராஜ், இ.ஆ.ப., திட்ட இயக்குநர் (சர்வ சிக்ஷா அபியான்) திருமதி.பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர் (தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை) டாக்டர்.ஆர்.ஆனந்தகுமார், இ.ஆ.ப., ஆணையாளர் (புவியியல் மற்றும் சுரங்கத்துறை) டாக்டர்.ஆர்.பழனிச்சாமி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் (தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விக்கழகம்) திருமதி.கே.மைதிலி ராஜேந்திரன், இ.ஆ.ப., அரசு இணைச் செயலாளர் (உயர்கல்வித் துறை) திருமதி.ஆர்.லில்லி, இ.ஆ.ப., இணை ஆணையாளர் (அமலாக்கத்துறை மற்றும் வணிகவரித்துறை) திருமதி.மரியம் பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அரசு இணைச் செயலாளர் (தொழில் துறை) டாக்டர்.பிங்லே விஜய் மாருதி, இ.ஆ.ப., திட்ட இயக்குநர் (மாநில ஊரக சுகாதாரத் திட்டம்) டாக்டர்.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., இணை ஆணையாளர் (வணிகவரித்துறை) திரு.எம்.பாலாஜி, இ.ஆ.ப., துணை ஆணையர் (பணிகள்) திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.வி.அன்புச்செல்வன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.பிரவீண் பி. நாயர், இ.ஆ.ப., டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப., திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை குடிநீர் வடிகால் துறை, மின்சார வாரியம், போக்குவரத்து காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய பல்வேறு துறைகளின் உயர் அலுவலர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**